திட்டங்களை எடுத்துக்கொள்கிறபோது அதற்கு செலவாகிறது. அதனால் அதை ஒத்திப்போடலாம் என்று உயர்நீதி மன்றம் தெரிவித்திருக்கிறது என்பதுதான். போலீஸ்துறைத் தலைவர் அவர்கள் மதுரையில் இதுபோன்ற இயங்கும் நீதி மன்றம் ஒன்றைத் துவக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி உயர்நீதி மன்றத்துடன் கலக்கப்படுகிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சிறு குற்றங்களை உடனுக்குடன் விசாரித்துத் தீர்ப்பு வழங்க இத்தகைய இயங்கும் நீதி மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. இதில் நியூசென்ஸ், 'க்ரூயல்டி டு அனிமல்ஸ்' போன்ற இனங்களில் வருகிற சிறு குற்றங்களையும் விசாரிப்பதற்கான முறையில் விரிவான அதிகாரம் இவற்றுக்கு வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மற்ற சிறுசிறு குற்றங்களைக் கவனிப்பதற்காகத்தான் பெஞ்சு கோர்ட், ஆனரரி மாஜிஸ்ட்ரேட் கோர்ட் போன்ற அமைப்புக்களை நீதிமன்றத் துறையில் வைத்திருக்கிறோம். இந்தத் துறை அதற்கு சம்பந்தமில்லாத துறை. எங்கெங்கே சிறுசிறு குற்றங்கள் அதிகமாக வருகின்றனவோ அங்கங்கே பெஞ்ச் கோர்ட், ஆனரரி மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிக்கும்.

THIRU K. VINAYAKAM : May I know from the Minister as to who presides over these courts? Are they stipendiary magistrates or honorary magistrates? What are the receipts from these courts monthwar up to this date? What is the receipt collected by way of fine—is it not self sufficing?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த நீதி மன்றங்களில் எவ்வளவு வருமானம் வருகிறது என்கிற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இவை ஸ்பெஷல் ஆனரரி மாஜிஸ்ட்ரேட் தலைமையில்தான் நடைபெறுகின்றன. நான் கூறியது க்ரிமினல் ஜஸ்டிஸ் வழங்குவதில் நமக்கு செலவு அதிகமாகிறது. சிவில் ஜஸ்டிஸ் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம்தான் அதில் வரும் அதிகச் செலவை ஈடுகட்டிக்கொள்கிறது என்பதாகும். இயங்கும் நீதி மன்றங்களினால் நமக்கு அதிக லாபம் வருகிறது என்று நினைப்பது தவறு.

* 169 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குளித்தலையிலாவது அல்லது கரூரிலாவது சப்கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, குளித்தலையில் சப்கோர்ட் ஒன்றை வைக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு மனு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

1967 ஜூலை 5]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட வேண்டுகோள் ஒன்று வந்தது. 1964-இலும் வேண்டுகோள் வந்தது. அதுபற்றி உயர்நீதி மன்றத்தின் கருத்தைக் கேட்டோம். அதுபோல அமைப்பதற்குப் போதுமான வழக்குகள் அங்கே வருவதற்கு இல்லை என்று கூறிவிட்டார்கள்.

**திரு. தோ. மு. நல்லசாமி:** இந்த சப்கோர்ட்டை கரூரில் வைப்பது நல்லது, குளித்தலை, கரூர் ஆகிய இரண்டு தாலூக்காக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்ற கருத்தை இரண்டு பார் அசோசியேஷன்களும் சேர்ந்து விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்களே, அரசாங்கம் அதை முன்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது தெரியும். அதைக் கைவிட்டுவிட்டார்கள் என்றால் மீண்டும் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கரூரில் சப்கோர்ட் வைக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திருச்சியில் உள்ள துணை நீதி மன்றத்தில் ஒன்றை கரூருக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டது. ஆனால் ஓர் இடத்தில் ஒரு சப்-கோர்ட்டை வைப்பது என்றால் அதற்குப் போதுமான வழக்குகள் அந்த ஏரியாவில் இருக்குமா என்பதைப் பரிசீலனை செய்வது உயர்நீதி மன்றம். அவர்கள் இதையும் பரிசீலனை செய்து கரூரில் போதுமான வழக்குகள் இருக்காது, அதன் காரணமாக அங்கே வைப்பதற்கில்லை என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

**திரு. என். வரதராஜன்:** நீதி மன்றங்கள் பரவலாக இருக்க வேண்டுமென்பது கிராம மக்களுடைய அவா. ஆனால் வழக்கறிஞர்கள் தங்களுக்குத் தோதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இப்படிப் பரவலாக ஏற்படுவதை எதிர்க்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதுபற்றி அமைச்சர் அவர்களுடைய அபிப்பிராயம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நீதி மன்றங்கள் பொது மக்களுடைய வசதிக்கேற்றபடி அமைய வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. புதிய நீதி மன்றங்களைத் தொடங்குகிறபோது போதுமான வழக்குகள் இருக்குமா, செலவு செய்யக்கூடிய பணத்திற்கு ஏற்ற நன்மை ஏற்பட்டதா என்பதை உயர்நீதி மன்றம்தான் பரிசீலனை செய்து தெரிவிக்கிறது. அவர்களுடைய கருத்தை ஏற்று இந்த அரசாங்கம் நடைபெறுகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** ஏற்கெனவே பரிசீலித்து கைவிட்ட இந்தத் திட்டத்தை அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மீண்டும் கவனிக்கப்படும், உயர்நீதி மன்றம் ஏற்றுக்கொண்டால்.

*170 வினா.—திரு. வெ. முனுசாமி: மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செஞ்சியில் மாவட்ட சிவில் நீதி மன்றம் (District Munsiff Court) ஏற்படுத்தும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அரசாங்கத்திடம் அத்தகைய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** வினாக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) சென்னையில் குடிசைப் பகுதிகளில் தொடர்ந்து தீ விபத்துக்கள்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** சென்னை நகரில் தொடர்ந்து நடைபெற்று வரும் தீ விபத்துக்கள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் படித்துவிட்டு, அதைப்பற்றிய சில கருத்துக்களை மட்டில், ஒருசில வாக்கியங்களில் வழங்கி முடித்துவிடுமாறு இருவரையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THIRU P. G. KARUTHIRUMAN : I wish to raise the following adjournment motion—

'That the House do stand adjourned to discuss a matter of public importance, namely—

The continuous fire accidents taking place at early hours on 5th July 1967 at Nattuthottam and Slaterpuram in the Madras City, the failure of the Government to institute proper enquiry regarding the cause of fire accidents, taking proper steps to afford relief to the victims and the failure of the Fire Service Brigade to give timely help and service due to their negligence.

***திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, கடந்த நான்கு நாட்களில் நாள்தோறும் தொடர்ந்து சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக,

(1) இராயபுரம் கடற்கரைப் பிரதேசத்தில் மீனவர் வாழ் பகுதியிலும்;

(2) தேனாம்பேட்டை சிவசண்முகபுரத்திலும்;

(3) மயிலாப்பூர் லஸ் கார்னரை அடுத்துள்ள பட்டுநூல்காரன் தோட்டத்திலும்;